**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. K.JEEVA ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 4.50.0 HA LOCATED AT SF.NO. 209 (PART), ALUR VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 17.10.2023 AT 12.00 PM AT M/S. SRI SATHYA SAI MARRIAGE HALL, SIPCOT SERVICE ROAD, SIPCOT PHASE II, MORANAPALLI, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. A. Sadhanai kural | : | District Revenue Officer, Krishnagiri. (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 3 | Er. P. Krishnan | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 4 | Thiru. K. Jeevanantham | : | Representative of M/s. K.Jeeva Rough Stone Quarry |
| 5 | Thiru. P.Gopinath | : | EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 65 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed project of rough stone quarry of M/S. K.Jeeva Rough Stone Quarry, Lease over an Extent of 4.50.0 Ha Located at SF. No. 209 (Part), Alur Village, Hosur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added

that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The New Indian Express" dated 13.09.2023 and bit notices regarding public hearing was issued to the public of P.S Thinnur Village, Alur Village and Kaderipalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the District Revenue Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. P. Gopinath, EIA Consultant, M/s. Eco Tech Labs Private Limited, Chennai of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough Stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Navin Kumar, Sundatti Village:**

Thiru. Navin Kumar said that, we have no problem with the proposed quarry project. The Quarry trucks should not be operated during schools and colleges opening and closing hours. Saplings should be planted and maintained on both

sides of the road. Water should be sprinkled on the roads to avoid dust emanation. Financial assistance should be given to schools and colleges during festivals. He requested to provide employment facility to the unemployed youth in the proposed quarry project.

**2. Thiru. Vinodh, Alur Village:**

Thiru. Vinodh has said that, we have no problem with the proposed quarry project. Water should be sprinkled periodically, so that no dust is emanated during the quarry operation and the quarry should be operated without any harm to the general public. The quarry trucks should be operated with low speed. The road available for the quarry truck movement is damaged and he requested that the road should be repaired.

**3. Thiru. Shankar, Thinnur Village:**

Thiru. Shankar has said that, we have no problem with the proposed quarry project. As mentioned in power point presentation, no pollution prevention measures are being taken in the existing quarries. Only water is sprinkled on roads by two or three water tipper trucks. Also, they are already carrying high amount of blasting during the operation of the quarries. This causes cracks in nearby houses.

**Reply:**

The EIA Consultant of the proposed quarry project has replied that, In past days, normal blasting method was used in quarry operation. Presently, nonel blasting method is used in quarry operation. So there is no possibility of cracks in houses due to blast vibrations. He also informed that, the blasting will be carried out only at specific times.

**4. Thiru. Prakash, President, Alur Village:**

Thiru. Prakash has said that, we have no problem with the proposed quarry project. This project will generate revenue for our panchayat. So he welcomes the project. However, dust emanation should be controlled, so that it does not pollute

the environment as stated by the public. CSR fund of this project should be utilized only for this panchayat. Roads should be repaired at regular intervals. He also said that water should be sprinkled on the roads so that dust does not emnated during quarry truck movement.

Also, as per the statement of quarry management, normal blasting method was used in earlier times. Now, nonel blasting method is used.

**The District Revenue Officer, Krishnagiri:**

The District Revenue Officer, Krishnagiri has said that, as per the request of the local public, the Corporate Social Responsibility fund (CSR FUND) of this project should be utilized only to this panchayat. Trucks carrying stones from the quarry should also be covered with tarpaulins. Trucks should not be operated during opening and closing hours of the schools and colleges. Further, the District Revenue Officer, Krishnagiri has instructed the quarry management that, the road available for quarry truck movement should be renovated periodically through the CSR Fund.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 5 number of petition were received on the proposed M/s. K.Jeeva Rough Stone Quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed K.Jeeva Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

25/10/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

25/10/2023

**District Revenue Officer**
**Krishnagiri**

3/7

**District Collector**
**Krishnagiri**

3/7

**திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.209 (பகுதி), ஆளூர் கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.50.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 17.10.2023 அன்று சிப்காட் சர்வீஸ் ரோடு, சிப்காட் 2 வது வளாகம், மோரனப்பள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தி/ள். . ஸ்ரீ சத்யா சாய் கல்யாண மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. A.சாதனைக்குறள் | : | மாவட்ட வருவாய் அலுவலர்<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. K. ஜீவானந்தம், | : | பிரதிநிதி<br>தி/ள். க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு.P.கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்,<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 65 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள், பொதுமக்கள் மற்றும் திரு. க. ஜீவா ரப்

ஸ்டோன் குவாரியின் பிரதிநிதி அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 13.09.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும் பி.எஸ். தின்னூர் கிராமம், ஆலூர் கிராமம், காடேரிப்பள்ளி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் மேலாளர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. நவீன்குமார், சுண்டட்டி கிராமம்:**

திரு. நவீன்குமார் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை. பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் நேரத்தில் குவாரியின் கனரக வாகனங்கள் இயக்கப்பட கூடாது. சாலையின் இருபுறமும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டும். சாலைகளில் தூசு எழும்பா வண்ணம் தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும். பள்ளி, கல்லூரிகளுக்கு விழா காலங்களில் நிதி உதவி வழங்கிட வேண்டும். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**2. திரு. வினோத், ஆலூர் கிராமம்:**

திரு. வினோத் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை. குவாரி செயல்பாட்டின் பொழுது எவ்வித தூசும் எழும்பா வண்ணம் தண்ணீர் தெளித்து குவாரியை பொது மக்களுக்கு பாதிப்பின்றி இயக்க வேண்டும். குவாரியின் கனரக வாகனங்களை இயக்கும் பொழுது குறைந்த வேகத்தில் இயக்க வேண்டும். கனரக வாகனங்கள் செல்லும் சாலையானது மேடு, பள்ளமாக உள்ளது அச்சாலையை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**3. திரு. சங்கர், தின்னூர் கிராமம் :**

திரு. சங்கர் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை. நிழற்பட விளக்கக் காட்சியில் கூறியுள்ளவாறு எவ்வித மாசு தடுப்பு நடவடிக்கையும் இப்போதுள்ள குவாரிகளில் மேற்கொள்வதில்லை. இரண்டு மூன்று டிப்பர் லாரியின் மூலம் தண்ணீர் மட்டும் சாலைகளில் தெளிக்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே இங்குள்ள குவாரிகளின் செயல்பாட்டின் பொழுது அதிகளவில் வெடிவைக்கிறார்கள். இதனால் அருகில் உள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது. என்று கூறினார்.

**பதில் :**

திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் அவர்கள், முற்காலத்தில் சாதாரண வெடிவைக்கும் முறை இருந்தது. தற்பொழுது NONEL BLASTING முறை பயன்படுத்தப்படுகிறது. அதனால் வெடி அதிர்வுகளால் வீடுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும், குறிப்பிட்ட நேரங்களில் தான் வெடி வெடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

**4. திரு. பிரகாஷ், ஆலூர் கிராம பஞ்சாயத்து தலைவர் :**

திரு. பிரகாஷ் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதினால் எவ்வித பிரச்சனை இல்லை. எங்களுடைய பஞ்சாயத்திற்கு இத்திட்டத்தால் வருவாய் கிடைக்கும். அதனால் இக்குவாரி திட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால், பொது மக்கள் கூறியவாறு சுற்றுச்சூழல் மாசு அடையாதவாறு தூசு கட்டுப்படுத்தப்பட வேண்டும். இக்குவாரி நிறுவனத்தின் சமூக நல நிதியை (CSR FUND) இப்பஞ்சாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். சாலைகளை சீரான கால இடைவெளியில் சீரமைக்க வேண்டும். கனரக வாகனங்கள் செல்லும் பொழுது தூசு எழும்பாமல் சாலைகளில் தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், குவாரி நிறுவனத்தினர் கூறியவாறு முற்காலத்தில் சாதாரண வெடிவைக்கும் முறை இருந்தது. தற்பொழுது NONEL BLASTING முறை பயன்படுத்தப்படுகிறது என்று கூறினார்.

**மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள்:**

மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினரிடம் பொது மக்கள் கூறியவாறு இக்குவாரி நிறுவனத்தின் சமூக நல நிதியை (CSR FUND) இப்பஞ்சாயத்திற்கு மட்டுமே வழங்க வேண்டும். குவாரியிலிருந்து கனரக வாகனங்கள் கற்களை ஏற்றிச் செல்லும் பொழுதும் தார்ப்பாலின்கள் மூலம் மூடி எடுத்துச் செல்ல வேண்டும். பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் நேரங்களில் கனரக வாகனங்களை இயக்கக் கூடாது. சமூக நல நிதியின் (CSR FUND) மூலம் குவாரியின் கனரக வாகனங்கள் செல்லும் சாலையை அவ்வப்போது புனரமைக்கப்பட வேண்டும் என்று குவாரி நிர்வாகத்தினரிடம் கூறினார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து 5 மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், திரு. க. ஜீவா ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

25/10/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

மாவட்ட வருவாய் அலுவலர்
கிருஷ்ணகிரி
6/7

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி
6/7